முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை**: திருமதி.K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் வெள்ளிக்கிழமை

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.75/2019**

*(CNR.No.TNSV01003635/2019)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம், காரைக்குடி |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.252/2018 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | சதீஸ்குமார் (வயது 49)<br>த/பெ.வசந்தன்,<br>46, வேலாயுதம் தெரு,<br>சிவகாசி. |
| எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் பெயர் | ஹரிஸ் பேப்பர் கம்பெனி,<br>கூட்டு நிறுவனம், அதன் நிர்வாக<br>பங்குதாரர் சுப்பிரமணியன் மூலம் (வயது 41),<br>கிழக்கு கோபுர வாசல், நகரத்தார் டிரஸ்ட்,<br>பிள்ளையார்பட்டி, திருப்பத்தூர் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br>**நிரந்தர முகவரி:**<br>கதவிலக்கம் 41, முதல் தளம்,<br>மஹால் தெரு, மதுரை. |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு 12 மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், அபராதம் ரூ.5,50,000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் கு.வி.மு.ச பிரிவு 255(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. அபராதம் செலுத்துவதற்கு 30 நாட்கள் கால அவகாசம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. ரூ.5,50,000/-த்திலிருந்து ரூ.5,45,000/-த்தை புகார்தாரருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக |

| | |
|---|---|
| | வழங்க கு.வி.மு.ச பிரிவு 357(1)(பி)-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் இல்லை. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், காரைக்குடி, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.252/2018-ல் கடந்த 18.09.2019-ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட தண்டனை தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர்/ எதிரி அபராதத் தொகையான ரூ.5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம்)த்தை ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அத்தொகையிலிருந்து வழக்கு காசோலை தொகையான ரூ.5,45,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம்) புகார்தாரருக்கு கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி நஷ்ட ஈட்டுத் தொகை உள்ளிட்ட அபராதத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு மேலும் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்றும், விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரி தண்டனையை அனுபவிப்பதற்காக ஒரு மாத காலத்திற்குள் சரணடையுமாறும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி சரணடையத் தவறினால், அவரைச் சிறையில் அடைப்பதற்காக விசாரணை நீதிமன்றம் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:12:43 +0530

27.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | |
|---|---|
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 14.10.2019 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 14.11.2019 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 27.03.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 10.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.*S*.கௌதம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.*N*.சங்கர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீ ர் ப் பு ரை-

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில், நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம், காரைக்குடி ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்:252/2018-ல் உள்ள எதிரி மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2. எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்துள்ள புகாரின் சுருக்கம்:-**

இம்மேல்முறையீடு குறிப்பிடும் வழக்கில் ஹரிஸ் பேப்பர் கம்பெனி, கூட்டு நிறுவனம் பேப்பர்களை வியாபாரிகளுக்கு மொத்தமாகவும், தனி நபர்களுக்கு சில்லரையாகவும், கடனிற்கும், ரொக்கத்திற்கும் விற்பனை செய்து வருகிறது என்றும், எதிரி சிவகாசி டவுன், கதவு எண்.46-ல் வேலாயுதம் தெருவில் ஸ்ரீலெட்சுமி அசோசியேட்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் என்றும், அதனடிப்படையில் புகார்தாரரிடம் கடந்த 12.04.2016-ம் தேதி வரை எதிரி பேப்பர் வாங்கிய வகையில் ரூ.25,43,243/- (இருபத்தைந்து லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து இருநூற்று

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:12:53 +0530

நாற்பத்தி மூன்று) தர வேண்டியிருந்தது என்றும், அதன் பின்னர் புகார்தாரர் நிறுவனத்திற்கு மேற்படி பாக்கித் தொகைக்கு காசோலைகள் மூலம் எதிரி பணம் செலுத்தியது போக கடந்த 05.09.2018-ம் தேதியில் ரூ.13,15,230/- (பதிமூன்று லட்சத்து பதினைந்தாயிரத்து இருநூற்றி முப்பது)-ஐ எதிரி செலுத்த வேண்டியிருந்தது என்றும், அதற்கு எதிரி கடந்த 05.09.2018-ம் தேதி, கடந்த 06.09.2018-ம் தேதியிட்ட 000299 என்ற எண்ணுள்ள ரூ.4,79,921/-(நான்கு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்று)-க்கான லெட்சுமி விலாஸ் வங்கி, சிவகாசி கிளை காசோலை ஒன்றை புகார்தாரரின் பெயருக்கு கொடுத்துள்ளார் என்றும், அதை புகார்தாரர் கடந்த 06.09.2018-ம் தேதி தான் கணக்கு வைத்திருக்கும் இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கிளையில் வசூலுக்காக சமர்ப்பித்த பொழுது அது கடந்த 10.09.2018-ம் தேதி Exceeds arrangement என்ற குறிப்புச்சீட்டுடன் அதன் மதிப்பு மறுக்கப்பட்டு, திருப்பப்பட்டுவிட்டது என்றும், இதுசம்பந்தமாக புகார்தாரர் கடந்த 22.09.2018-ம் தேதி அனுப்பிய அறிவிப்பை எதிரி கடந்த 25.09.2018-ம் தேதி பெற்றுக்கொண்டு பணம் தரவில்லை என்றும், மாறாக, பல பொய்யான விபரங்களை கண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், எதிரியின் மேற்படி செய்கையானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-*A*-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்று இந்த தனி புகாரானது கு.வி.மு.ச. பிரிவு 200-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**3)** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக புகார்தாரர் தரப்பில், புகார்தாரர் ம.சா.1ஆகவும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சிவகாசி கிளை உதவி மேலாளர் ம.சா.2

ஆகவும் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் எ.ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4)** விசாரணை நீதிமன்றம் எதிரிக்கு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்கு 12 மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், அபராதம் ரூ.5,50,000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் கு.வி.மு.ச பிரிவு 255(2)-ன் கீழும், அபராதம் செலுத்துவதற்கு 30 நாட்கள் கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டுள்ளது. ரூ.5,50,000/-த்திலிருந்து ரூ.5,45,000/-த்தை புகார்தாரருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக வழங்க கு.வி.மு.ச பிரிவு 357(1)(பி)-ன் கீழ் உத்தரவிட்டுள்ளது. எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5) மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:-**

*i)* விசாரணை நீதிமன்றம் சட்டத்திற்கு எதிராகவும், சாட்சியத்திற்கு முரணாகவும் எதிர்மேல்முறையீட்டாளர் சாட்சியம் அளித்திருப்பதால் எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

*ii)* விசாரணை நீதிமன்றத்தில் புகார்தாரர் வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை.

*iii*) விசாரணை நீதிமன்றம் சட்டப்பூர்வமாக நிறைவேற்றப்படவேண்டிய தொகைக்காகத்தான் வழக்குக் காசோலை கொடுக்கப்பட்டது என்பதை நிரூபிக்கப்படவில்லை என்ற வாதத்தினை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கியுள்ளது.

*iv*) மேற்படி புகார் மனுவும் காரைக்குடி தாலுகாவிற்கு உட்பட்டு வராத காரணத்தினால் காரைக்குடி விசாரணை நீதிமன்றம் ஆள் வரம்புகை இல்லை என்ற வாதத்தினை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பும் வழங்கியுள்ளது.

*v)* சட்டப்படி புரப்பரைட்டர்சிப்பிற்கு கொடுக்க வேண்டிய வழக்கறிஞர் அறிவிப்புக் கொடுக்கப்படவில்லை என்ற வாதத்தினை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை.

*vi*) புகார்தாரரின் கட்சிப்படி வா.த.சா.ஆ.3-ல் கடந்த 20.04.2016 உடன் தொழில் வர்த்தகம் முடிவு பெற்றுள்ளது. ஆனால் புகாரில் 05.09.2018 வரை தொழில் செய்ததாக கூறியுள்ளதை நிரூபிக்கவில்லை என்ற வாதத்தினை கருத்தில் கொள்ளவில்லை.

*vii*) கடந்த 20.04.2016-க்குப் பின்னீடு தொழில் வர்த்தகம் செய்ததற்கு உண்டான யாதொரு ரசீதும் தாக்கல் செய்யப்படவில்லை என்ற வாதத்தினை எதிரிக்கு சாதகமாக்காமல் பாதகமாகியுள்ளதும் சரியல்ல. கடந்த 05.09.2018 வரையிலான யாதொரு ரசீதும் முன்னிறுத்தப்படவில்லை. மாறாக புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையின் போது 05.09.2018-ம் தேதியன்று யாதொரு கொள்முதலும் எதிரி செய்யவில்லை என்று குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதை

விசாரணை நீதிமன்றம் தனது தீர்ப்பில் எங்கும் குறிப்பிடவில்லை.

*viii*) மேலும் கடந்த 07.06.2018-ம் தேதியன்று புகார்தாரரை தொடர்ச்சியாக குறுக்கு விசாரணை செய்த போது 2017-ம் ஆண்டில் நவம்பர் மாதம் 9-ம் தேதியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சிவகாசி கிளை ஒன்றை எதிரி 4,79,921/-க்கு கொடுத்தார். ஆனால் அது திருப்பப்பட்டுவிட்டது. ஆனால் அந்த காசோலையில் கண்ட தொகைக்காகத்தான் தாவா காசோலை கொடுத்தார். ஆக புகார்தாரரின் கட்சிப்படி 05.09.2018-ல் வழக்குக் காசோலை கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. அதனை விசாரணை நீதிமன்றம் யாதொரு இடத்திலும் குறிப்பிடாமல் தவறான தீர்ப்பினை பிறப்பித்துள்ளது.

*ix*) காசோலை எந்த தேதி புகார்தாரர் வசம் கொடுக்கப்பட்டது என்று எதிரி தரப்பில் சுட்டிக்காட்டியதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை.

*x*) மேலும் விசாரணை நீதிமன்றம் வா.த.சா.ஆ.2-யை தவறுதலாக எதிரிக்குப் பாதகமாக உற்றுநோக்கி தீர்ப்பினை பிறப்பித்துள்ளது.

*xi*) விசாரணை நீதிமன்றத் தீர்ப்பில் கடந்த 14.02.2017-ம் தேதி வழங்கப்பட்டிருக்கும் காசோலையானது 2015-ம் வருடம் கொடுத்திருக்க வாய்ப்புகள் இல்லை என்று கூறியுள்ளதும் தவறானது. உண்மையில் கடந்த 2015-ம் வருடம் வாக்கில் சரக்கு எடுக்க செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்றே கூறப்பட்டுள்ளது. 2015-ம் வருடம் காசோலை கொடுத்ததாக கூறப்படாத போது அதனை விசாரணை நீதிமன்றம் சரியாக புரிந்துகொள்ளாமல் தவறுதலாக எதிரிக்குப் பாதகமாக அதனை உற்றுநோக்கியுள்ளதும் ஏற்கத்தக்கதல்ல.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:13:50 +0530

27.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

*xii*) மேலும் சட்டப்படி தீர்க்கப்பட வேண்டிய பொறுப்பிற்காக வழக்குக் காசோலை கொடுக்கப்படவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாமல் கூறியுள்ளதும் சரியல்ல.

*xiii*) மேலும் விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பு சாட்சியம் அளித்த போது வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புகார் மனுவிற்கும், தனது சாட்சியத்திற்கும் முன்னுக்குப் பின் முரணான விவரங்களைத் தெரிவித்துள்ளனர்.

*xiv*) மேலும் விசாரணை நீதிமன்றம் அனுமானத்தினை எதிரிக்கு சாதகமாக்காமல் பாதகமாக மாற்றி தீர்ப்பினை வழங்கியுள்ளதும் ஏற்கத்தக்கதல்ல.

*xv*) மேலும் இயற்கை நீதிக் கோட்பாட்டின் படி வழக்கில் எழக்கூடிய அனுமானங்களை வைத்து மட்டுமே எதிரி வழக்காடலாம், எதிரி யாதொரு வாய்மொழி எழுத்துப்பூர்வமான சாட்சியை முன்னிடவேண்டிய அவசியம் இல்லை என்றும், மேல்முறையீட்டாளர் தரப்பில் எழுப்பப்பட்டுள்ள வாதத்தினை கருத்தில் கொள்ளாமல் எதிரி தரப்பில் யாதொரு ஆவணமோ சாட்சியோ முன்னிடப்படாமல் அனுமானத்தை மறுத்து தோற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

*xvi*) மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சந்தேகங்களையும் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு சாதகமாக்காமல் அதனை மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு பாதகமாக அனுமானித்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது சட்டத்திற்கும், நியாயத்திற்கும் முரணானது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:13:58 +0530

27.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

*xvii*) எதிரி தரப்பு சாட்சி-1 ஆக பிள்ளையார்பட்டி வங்கி மேலாளரின் சாட்சியத்தின்படி புகார்தாரர் முகவரிகள் சிவகங்கை மாவட்டத்திற்குள் அமையவில்லை என்ற வாதத்தினை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை.

*xviii*) மேலும் ஆள் வரம்புகை இல்லை என்று வங்கி மேலாளரின் சாட்சியத்தினை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் அனுமானத்தினை எதிரிக்குப் பாதகமாக முன்னிறுத்தியுள்ளதும் ஏற்கத்தக்கதல்ல.

எனவே, மேல்முறையீடுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை அனுமதித்தும், காரைக்குடி, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் கடந்த 18.09.2018-ம் தேதியன்று ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.252/2018-ல் வழங்கிய தீர்ப்பை நீக்கரவு செய்தும் உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) **இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்**

1 விசாரணை நீதிமன்றம் எதிரி மீதுள்ள குற்றச்சாட்டான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன்படியான குற்றச்சாட்டை புகார்தாரர் தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதாக கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**7) பிரச்சனைகள் : 1 மற்றும் 2**

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டிருந்த மனுவை பரிசீலித்ததில், ஹரிஸ்

பேப்பர் கம்பெனி, கூட்டு நிறுவனம் பேப்பர்களை வியாபாரிகளுக்கு மொத்தமாகவும், தனி நபர்களுக்கு சில்லரையாகவும், கடனிற்கும், ரொக்கத்திற்கும் விற்பனை செய்து வருகிறது என்றும், எதிரி சிவகாசி டவுன், கதவு எண்.46-ல் வேலாயுதம் தெருவில் ஸ்ரீலெட்சுமி அசோசியேட்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் என்றும், அதனடிப்படையில் புகார்தாரரிடம் கடந்த 12.04.2016-ம் தேதி வரை எதிரி பேப்பர் வாங்கிய வகையில் ரூ.25,43,243/- (இருபத்தைந்து லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து இருநூற்று நாற்பத்தி மூன்று) தர வேண்டியிருந்தது என்றும், அதன் பின்னர் புகார்தாரர் நிறுவனத்திற்கு மேற்படி பாக்கித் தொகைக்கு காசோலைகள் மூலம் எதிரி பணம் செலுத்தியது போக கடந்த 05.09.2018-ம் தேதியில் ரூ.13,15,230/- (பதிமூன்று லட்சத்து பதினைந்தாயிரத்து இருநூற்றி முப்பது)-ஐ எதிரி செலுத்த வேண்டியிருந்தது என்றும், அதற்கு எதிரி கடந்த 05.09.2018-ம் தேதி, கடந்த 06.09.2018-ம் தேதியிட்ட 000299 என்ற எண்ணுள்ள ரூ.4,79,921/-(நான்கு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்று)-க்கான லெட்சுமி விலாஸ் வங்கி, சிவகாசி கிளை காசோலை ஒன்றை புகார்தாரரின் பெயருக்கு கொடுத்துள்ளார் என்றும், அதை புகார்தாரர் கடந்த 06.09.2018-ம் தேதி தான் கணக்கு வைத்திருக்கும் இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கிளையில் வசூலுக்காக சமர்ப்பித்த பொழுது அது கடந்த 10.09.2018-ம் தேதி Exceeds arrangement என்ற குறிப்புச்சீட்டுடன் அதன் மதிப்பு மறுக்கப்பட்டு, திருப்பப்பட்டுவிட்டது என்றும், இதுசம்பந்தமாக புகார்தாரர் கடந்த 22.09.2018-ம் தேதி அனுப்பிய அறிவிப்பை எதிரி கடந்த 25.09.2018-ம் தேதி பெற்றுக்கொண்டு

பணம் தரவில்லை என்றும், மாறாக, பல பொய்யான விபரங்களை கண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என கூறி விளக்கம் செய்யப்பட்டுள்ளது.

**8)** மேற்படி புகார் மனுவிற்கு ஆதரவாக எதிரி கைப்பட எழுதி புகார்தாரருக்கு கடைசியாக கொடுத்ததாக முன்னிடப்பட்ட ம.சா.ஆ.5 காசோலையை பரிசீலனை செய்ததில், புகார்தாரர் பெயருக்கு 06.09.2018-ம் தேதியிட்ட காசோலை ரூ.4,79,921/- என்ற தொகைக்கு கொடுக்கப்பட்டதாகவும், புகார்தாரர் மேற்படி காசோலையை கடந்த 06.09.2018 தேதியன்று புகார்தாரர் தனது வங்கி கணக்குள்ள இந்தியன் வங்கி பிள்ளையார்பட்டி கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்த போது அந்த காசோலை கடந்த 10.09.2018-ம் தேதியன்று Exceeds Arrangement என்ற குறிப்புச்சீட்டுடன் அதன் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டுவிட்டது என்ற காரணம் கண்டுள்ளது. மேற்படி காசோலை 06.09.2018 அன்று Exceeds Arrangement என்ற குறிப்புச்சீட்டுடன் இந்தியன் வங்கியால் திருப்பப்பட்டிருப்பதை ம.சா.ஆ.7-ன் மூலம் அறிய முடிகிறது. ம.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பில், குறிப்பாக புகார்தாரர் ஹரிஷ் பேப்பர் கம்பெனி என்ற பெயரில் மொத்த வியாபாரம் செய்து வருகின்றார் என்றும், மேற்படி நிறுவனத்தில் புகார்தாரரும், அவருடைய தகப்பனாரும் பங்குதாரர்கள் என்றும், மேற்படி கூட்டு நிறுவனமும் பதிவு எண்.246/2014 என முறையாக பதிவு செய்யப்பட்டது என்றும், மேற்படி கூட்டு நிறுவனத்திற்கு எழுத்து மூலமான பார்ட்னர்ஷிப் பத்திரம் உள்ளது என்றும்,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:14:22 +0530

புகார்தாரர் மேற்படி கூட்டு நிறுவனத்திற்காக சட்டப்படி வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் உள்ளது என்றும், எதிரி ஸ்ரீலெட்சுமி அசோசியேட்ஸ் என்ற பெயரில் சிவகாசியில் தொழில் செய்து வருகிறதாகவும், எதிரி புகார்தாரர் நிறுவனத்தில் 26.11.2015 முதல் Credit-ல் Kraft Paper வாங்கி வருகிறதாகவும், எதிரி புகார்தாரர் நிறுவனத்தில் Credit-ல் Kraft Paper வாங்கி வருவதற்கு இன்வாய்ஸ் *(Invoice)* உள்ளது என்றும், மேற்படி இன்வாய்சில் டெலிவரியின் போது எதிரி கையெழுத்து செய்து கொடுப்பார் என்றும், சரக்கு எடுத்து 30 தினங்களுக்குள் தொகை செலுத்த வேண்டும் என்றும், ஆனால் எதிரி ஆரம்பத்திலிருந்தே காலதாமதமாகவே தொகை செலுத்துவார் என்றும், புகார்தாரரும் வாடிக்கையாளரின் நலன் கருதி தன்னுடைய சட்ட நடவடிக்கைக்கு விரோதமில்லாமல் எதிரி காலதாமதமாக செலுத்தும் தொகைகளை பெற்று வருகிறார் என்றும், இந்நிலையில் எதிரி புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகை 12.04.2016 அன்று வரை ரூ.25,43,243/- இருப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், வியாபாரத்திற்கு சரக்கு வாங்குவதால் நிலுவைத் தொகைக்கு வியாபார ரீதியாக வட்டி உண்டு என்றும், அதன்பிறகு எதிரி வங்கி காசோலைகள் மூலம் தொகை கொடுத்தார் என்றும், அதுவும் புகார்தாரர் கணக்கில் வரவாகி உள்ளது என்றும், இறுதியாக 05.09.2018 அன்று ரூ.13,15,230/- பாக்கி இருந்தது என்றும், அதன்படி 05.09.2018 அன்று எதிரி சிவகாசியில் இருந்து மதுரைக்கு வந்து தனது வங்கி கணக்குள்ள லெட்சுமி விலாஸ் வங்கி, காமாட்சியம்மன் நகர், ரயில்வே பீடர் ரோடு, சிவகாசி கிளை காசோலை எண்.000299 என ரூ.4,79,921/-க்கு பெயர், தொகை, தேதி பூர்த்தி செய்யப்பட்ட ஒரு

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:14:34 +0530

27.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

காசோலையை வங்கியில் செலுத்தி தொகை பெற்று புகார்தாரருக்கு தரவேண்டிய ரூ.13,15,230/- தொகைக்கு பகுதி தொகையாக ரூ.4,79,921/-ஐ வரவு வைத்துக் கொள்ளும்படி புகார்தாரரிடம் தெரிவித்தார் என்றும், மீதி தொகை விரைவில் திருப்பி செலுத்துவதாகவும் உறுதி அளித்தார் என்றும், அதனை உண்மை என நம்பி புகார்தாரரும் மேற்படி காசோலையை தன் வங்கி கணக்குள்ள இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கிளையில் 06.09.2018-ம் தேதியன்று வசூலுக்கு சமர்ப்பித்ததில் மேற்படி காசோலையும் Exceeds Arrangement என செலாவணி ஆகாமல் திருப்பப்பட்டதாக 10.09.2018 அன்று இந்தியன் வங்கி ரிட்டன் மெமோ மூலம் புகார்தாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும், புகார்தாரரின் தகப்பனாரும், மேற்படி ஹரிஷ் பேப்பர் கம்பெனி கூட்டு நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவரான எஸ்.பி.அருணாச்சலம் செட்டியார் அவர்கள் பிள்ளையார்பட்டி திருக்கோவில் நிர்வாக அறங்காவலர்களில் ஒருவராக பொறுப்பேற்று பிள்ளையார்பட்டியில் இருந்து வருவதால் நிர்வாக வசதிக்காக ஹரிஷ் பேப்பர் கம்பெனியின் பெயரில் இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டியில் கணக்கு தொடங்கப்பட்டது என்றும், அந்த வங்கி கணக்கில் மேற்படி கம்பெனியின் வரவு செலவு கணக்குகள் நடைபெற்று வருகின்றன என்றும், பல வாடிக்கையாளர்கள் மேற்படி வங்கி கணக்கில் தொகை செலுத்தி வருகின்றார்கள் என்றும், அதனடிப்படையிலேயே எதிரி கொடுத்த காசோலையும் இந்தியன் வங்கி பிள்ளையார்பட்டி கிளையில் வசூலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும், எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் போதிய தொகை இல்லை என நன்கு தெரிந்தே புகார்தாரரை மோசடி செய்ய வேண்டும்

என்ற உள்நோக்கத்துடன் திட்டமிட்டே மேற்படி காசோலை கொடுத்து புகார்தாரரை ஏமாற்றியுள்ளார் என்றும், எனவே இந்த அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய காசோலை தொகையான ரூ.4,79,921/- செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டு அசல் காசோலையை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், இல்லையெனில் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடர நேரிடும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. ம.சா.ஆ.9 ஆவணம் புகார்தாரர் தரப்பில் புகார்மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான அத்தாட்சியாக முன்னிடப்பட்டுள்ள அஞ்சல் ஒப்புதல் அட்டை என்பதும் தெரிய வருகிறது.

**9)** புகார்தாரர் ம.சா.1 எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட போது, உமது கம்பெனியில் முதன்முதலில் எதிரி எப்பொழுது பேப்பர் வாங்கினார் என்றால் கடந்த 2015-ம் ஆண்டு நவம்பர் மாதம் என்றும், எதிரிக்கு ஆரம்பத்திலேயே கடன் கொடுத்தீரா என்றால் இல்லை என்றும், முதல் இரண்டு விற்பனைகளை 10 நாள் கடனிற்கு கொடுத்தோம் என்றும், பின்னர் 30 நாட்கள் கடனிற்கு கொடுத்தோம் என்றும், எதிரி சிவகாசியில் லெட்சுமி அசோசியேட்ஸ் என்ற பெயரில் ஓர் உரிமையாளர் நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்றும், எதிரி பெற்றிருந்த பொருளுக்கு பணம் எவ்வாறு செலுத்துவார் என்றால் சில நேரம் காசோலை கொடுப்பார் என்றும், அது மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட பின்னர் ஆர்.டி.ஜி.எஸ்-ன் மூலமாக பணம் செலுத்துவார் என்றும், இன்று வரை எங்களுக்கு எதிரி வங்கியின் மூலம் மட்டுமே பணம் பரிமாற்றம் செய்திருக்கிறார் என்றும், ஹரிஷ்

எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் தொழில் ஏதும் செய்யவில்லை தானே என்றால் சரிதான் என்றும், முதல் 3 மாதம் மேற்படி பெயரில் தொழில் தொடங்கி பின்னர் மாற்றிவிட்டோம் என்றும், ஹரிஷ் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் உள்ள நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது தானே என்றால் இல்லை என்றும், உம்மிடம் பெற்ற பொருட்களுக்கு உரிய காலத்திற்குள் பணம் செலுத்தவில்லை என்றால் அதை பின்னிட்டு வட்டியோடு செலுத்த வேண்டும் என்ற எழுத்து பூர்வமான ஒப்பந்தம் உமக்கும், எதிரிக்கும் இடையே இல்லை என்றால் ஒப்பந்தம் இல்லை ஆனால் அதை ஒப்புக்கொண்டு எதிரி டெபிட் நோட்டில் கையொப்பம் செய்து கொடுத்திருக்கிறார் என்றும், 2017-ம் ஆண்டில் நவம்பர் மாதம் 9-ம் தேதியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சிவகாசி கிளை ஒன்றை எதிரி ரூ.4,79,921/-க்கு கொடுத்தார் என்றும், ஆனால் அது திருப்பப்பட்டுவிட்டது என்றும், பின்னர் அந்த காசோலையில் கண்ட தொகைக்காக தாவா காசோலையை கொடுத்தார் என்று தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

**10)** புகார்தாரர் தரப்பில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சிவகாசி கிளையின் உதவி மேலாளர் மனோஜ்குமார் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில் தங்கள் வங்கியில் ஸ்ரீலெட்சுமி அசோசியேட்ஸ் என்ற பெயரில் சதீஷ்குமார் என்பவர் கணக்கு துவங்கியிருக்கிறார் என்றும், அது நடப்புக்கணக்கு என்றும், அதன் எண்.008502000011012 என்றும், மேற்படி நிறுவனம் ஓர் உரிமையாளர் நிறுவனம் என்றும், தாங்கள் மேற்படி நடப்புக்கணக்கிலிருந்து எதிரிக்கு 990732 என்ற எண்ணுள்ள காசோலையை எதிரிக்கு வழங்கியிருக்கிறோம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:14:59 +0530

என்றும், மேற்படி காசோலை தங்களது வங்கிக்கு கடந்த 07.11.2017-ம் தேதி வசூலுக்கு வந்தது என்றும், அது இந்தியன் வங்கியிலிருந்து வந்தது என்றும், அது எந்த வங்கிக்கிளை என்பதற்கு குறிப்புகள் இல்லை என்றும், அந்த காசோலை போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டிருக்கிறது என்றும், மேற்படி காசோலை புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், எதிரியின் வங்கிக்கணக்கு சம்பந்தப்பட்ட ஸ்டேட்மெண்ட் ஆப் அக்கவுண்ட்டின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.12 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** எதிரி தரப்பில் இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கிளையின் உதவி மேலாளர் அசோக்குமார் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில் தங்கள் வங்கியில் ஹரிஷ் பேப்பர் கம்பெனி என்ற பெயரில் எஸ்.பி.அருணாச்சலம், ஏ.ஆர்.சுப்பிரமணியன் ஆகிய பங்குதாரர்கள் நடப்புக்கணக்கு வைத்திருக்கிறார்கள் என்றும், அதன் எண்.6653246030 என்றும், மேற்படி கணக்கிற்கு கடந்த 16.07.2018-ம் தேதி முதல் 20.08.2019-ம் தேதி வரையுள்ள ஸ்டேட்மெண்ட் ஆப் அக்கவுண்ட் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 என்றும், அதே போல் புகார்தாரரால் தங்களது வங்கியில் வங்கிக்கணக்கு துவக்கப்பட்டதற்குண்டான வங்கிக்கணக்கு துவக்கும் விண்ணப்பம் மற்றும் கணக்கு துவக்கிய நபர்களின் அடையாள அட்டைகள் எ.ம.சா.ஆ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புகார்தாரரின் வழக்கினை மறுத்தளித்து எதிரி அவரது வழக்கினை நிரூபித்திருக்கிறாரா என்பது குறித்து பார்க்கும்பொழுது எதிரி விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை

என்பதும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

**12)** மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான புகார் மனுவை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்க கடன் அல்லது கட்டுப்பாடு புகார்தாரரை பொறுத்தமட்டில் காசோலை வழங்கிய எதிரிக்கு இருந்திருக்க வேண்டும். குறிப்பாக மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழாக சட்ட அனுமானம் புகார்தாரர், தன் தரப்பில் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை பொறுத்து குறிப்பாக சொல்லப்பட்டுள்ள அதன் உட்கூறுகளை முன்வைத்தால் போதுமானதாகும். மேற்படி சட்ட அனுமானம் எதிரி தன் தரப்பில் தனியாக சாட்சியங்களை முன்னிட்டோ, அல்லது மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சியங்களை பொறுத்து குறுக்கு விசாரணை செய்யும் போது மனு சங்கதிகளுக்கு மாறான உண்மையை வெளிக்கொண்டுவரும் பட்சத்தில் மேற்படி பிரிவு 139-ன் கீழான அனுமானத்தை மறுத்துரைத்ததாக ஏற்றுக் கொண்டு மனுவினை தள்ளுபடி செய்ய இயலும். மாறாக பிரிவு 139-ன் கீழ் புகார்தாரருக்கு, அதாவது காசோலை பெற்றவருக்கு ஆதரவாக உள்ள சட்ட அனுமானத்தை உரிய வகையில் மறுத்துரைக்க எதிரி தவறினால், அவர் குற்றவாளியென தண்டிக்கப்படுவதில் குறிக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பல்வேறு முன் தீர்ப்புகளின் அறிவுறுத்தியுள்ளது.

**13)**இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய இம்மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் சொல்லப்படும் காரணங்களை விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள்

குறிப்பாக விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை பரிசீலித்ததில், கீழ்வரும் முன் தீர்ப்பு சங்கதிகள் எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதை இந்நீதிமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

***Srinivasan Vs. State of Kerla 1999 (3) KLT 845***

*Rigours of Section 138 cannot be escaped by such drawer (guarantor) so far as, the cheque issued for whatever reason, it may be by him for discharge of any debt or other liability, returned by the banker unpaid. Question of co- extensive liability of the guarantor and principle debtor is found to be totally out of the purview of the said Section (No complainant can lie against the cheque issue as a security).*

***Naleena Vs. Arumugha Padayachi - 2015 (1) L.W 818 / CDJ 2014 MHC 6034***

*Section 118(a) presumption under N.I Act – the defendant fails to prove the non-existence of consideration by bringing on record such facts and circumstances which would lead this court to believe the non-existence of consideration either by direct evidence or by preponderance of probabilities showing that the existence of consideration was improbable, doubtful or illegal, the complainant is entitled to the benefit of presumption arising u/s. 118(a) of N.I Act.*

***MMTC Ltd., Vs. Medchi Chemicals and pharma (P) Ltd., AIR 2002 SC 182***

*There is no requirement that the complainant must specifically allege in the complaint that there was a subsisting liability. The burden of proving that there was*

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:15:21 +0530

*not existing debt or liability is on the accused/drawer. This they have to discharge in the trial. Merely on the basis of averments in the petition filed by the accused u/s. 482 Cr.P.C, the High Court not have concluded that there was no existing debt or liability. Such question could have been tried and decided only at trial.*

**14)** மேற்கண்ட வகையில் விவரித்தவாறு விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் முன்னிடப்பட்டுள்ள நிலையில், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழாக சட்டப்படியாக அனுமானம் காசோலை பெற்றவருக்கு அதாவது புகார்தாரருக்கு உள்ள நிலையில், அந்த அனுமானம் உரிய வகையில் இம்மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் மறுத்தளிக்கப்படாததால், மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட மனு சங்கதிகள் உரிய சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதாக ஏற்றுக்கொண்டு விசாரணை நீதிமன்றம் இம்மேல்முறையீட்டாளரை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளது. குறிப்பாக விசாரணை நீதிமன்றம் இம்மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்த போது மனு சங்கதிக்கு புறம்பாக அதாவது மனு சங்கதிகளை மறுக்கும் வகையில் வேறு சங்கதிகளை வெளிக்கொண்டு வரவில்லை என்றும், அதற்கு, மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 141-ன்கீழான சட்ட வகையங்களையும், மனுதாருக்கு ஆதரவாக உள்ள பல்வேறு முன்தீர்ப்பு சங்கதிகளையும் தெளிவாக விவரித்து, அதாவது எதிரி காசோலை வழங்கியதையும், காசோலையில் கண்டிருப்பது தன்னுடையது அல்ல என்று மறுக்காத நிலையில், அதாவது

ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில், வேண்டுமென்றே புகார்தாரரை ஏமாற்றும் நோக்கத்திலேயே தன் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தே பின்தேதியிட்டு காசோலையை கொடுத்தது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி காசோலை உரிய நேரத்தில் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு "Exceeds arrangement" என்ற குறிப்புச்சீட்டுடன் திருப்பப்பட்ட பின்னர் உரிய காலத்தில் வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரியின் முகவரிக்கு அனுப்பி இருந்த நிலையில், எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தண்டனை தீர்ப்புரை வழங்கியிருப்பதில் தவறேதும் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவில்லை.

**15)** இந்நிலையில் விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தண்டனை தீர்ப்புரையில் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என இந்நீதிமன்றமும் கருதுவதால், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என கருதி இப்பிரச்சனைகளுக்கு விடை காணப்படுகிறது.

**இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், காரைக்குடி, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.252/2018-ல் கடந்த 18.09.2019-ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட தண்டனை தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர்/எதிரி அபராதத் தொகையான ரூ.5,50,000/-(ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம்)த்தை ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அத்தொகையிலிருந்து வழக்கு காசோலை தொகையான ரூ.5,45,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம்) புகார்தாரருக்கு கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:15:36 +0530

27.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

நஷ்ட ஈட்டுத் தொகை உள்ளிட்ட அபராதத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு மேலும் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்றும், விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரி தண்டனையை அனுபவிப்பதற்காக ஒரு மாத காலத்திற்குள் சரணடையுமாறும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி சரணடையத் தவறினால், அவரைச் சிறையில் அடைப்பதற்காக விசாரணை நீதிமன்றம் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.27 18:15:43 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:-**
நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை.
குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு
எண்.75/2019
தீர்ப்புரை நாள்: 27.03.2026